සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

ඉන්දීය ඉතිහාසය II (I කොටස)
இந்திய வரலாறு II (பகுதி I)
History of India II (Part I)

25 A | T | II

23.08.2019 / 0830 – 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**இந்திய வரலாறு - ஆதிகாலம் முதல் கி.பி. 1206 வரை**

சுட்டெண் : ....................................

**அறிவுறுத்தல்கள் :**

- ※ இப்பகுதி **40** வினாக்களைக் கொண்டுள்ளது. **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
- ※ ஒவ்வொரு வினாவுக்கும் தரப்படுள்ள **ஐந்து** தெரிவுகளில் **ஒன்று** மட்டுமே சரியானது. அச்சரியான விடையைத் தெரிவுசெய்து தரப்பட்டுள்ள **அறிவுறுத்தல்களுக்கேற்ப குறிப்பிடுக.**
- ※ இப்பகுதிக்கு **40** புள்ளிகள் வழங்கப்படும்.
- ※ **இரண்டு** பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று மணித்தியாலங்களாகும்.** விடைகளை எழுதிய பின்னர், **பகுதி I** இன் விடைத்தாள்களை **பகுதி II** இன் விடைத்தாள்களுடன் **இணைத்துக் கையளிக்குக.**

## பகுதி I

● **1** தொடக்கம் **10** வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்களுள் **ஒன்று** ஏதோ ஒரு காரணத்தினால் ஏனையவற்றுடன் **பொருந்தாது. பொருந்தாத** அப்பெயரை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**1.** (1) ஹெரடோற்றஸ் (2) பிளினி (3) மெகஸ்தெனிஸ்
(4) ஜஸ்ரின் (5) ஸ்ராபோ (.........)

**2.** (1) பாருகச்சா (2) சுப்பராக (3) தாம்பரலிப்தி
(4) தேவகிரி (5) காவேரிப்பட்டினம் (.........)

**3.** (1) நர்மதா (2) கிருஸ்ணா (3) துங்கபத்திரா
(4) மகாநதி (5) கோதாவரி (.........)

**4.** (1) உஜ்ஜயினி (2) சுவர்ணகிரி (3) தக்ஷீலா
(4) கலிங்க (5) தோசாலி (.........)

**5.** (1) மேகதூதம் (2) குமாரசம்பவம் (3) முத்ரா-ராக்ஸஸ
(4) மாளவிகானிமித்ரா (5) ருதுசம்காரம் (.........)

**6.** (1) பாக் (2) உதயகிரி (3) அஜந்தா
(4) எல்லோரா (5) ஔரங்கபாத் (.........)

tamilguru.lk

7. (1) நாகசேன (2) அச்யுதா (3) ருத்ரதேவா
(4) மதிலா (5) வியாக்ரராஜ (.........)

8. (1) மாறவர்மன் (2) மகேந்திரவர்மன் (3) நரசிம்மவர்மன்
(4) பரமேஸ்வரவர்மன் (5) நந்திவர்மன் (.........)

9. (1) முகமத் பின் காசிம் (2) சபுக்திஜீன் (3) அல்பிருணி
(4) கஸ்னி மஹ்மூத் (5) கோரி முகமத் (.........)

10. (1) கர்ப்பகிருகம் (2) விமானம் (3) அந்தராளம்
(4) துவார மண்டபம் (5) இரதம் (.........)

● **11** தொடக்கம் **15** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிப் பெயர்கள்** தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று **பொருந்தாது** உள்ளன. **பொருந்தாத** அச்சோடியை இனங்கண்டு அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

11. (1) சம்பா - அங்க
(2) தக்ஷீலா - கம்போஜ
(3) இந்திரபிரஸ்த - குரு
(4) மதுரா - சூரசேன
(5) வாரணாசி - காசி (.........)

More Past Papers at
tamilguru.lk

12. (1) வம்சக் கதைகள் - இராஜதரங்கிணி
(2) நாடகம் - சகுந்தலா
(3) காவியம் - பஞ்சதந்திரம்
(4) பாடல்கள் - இரகுவம்சம்
(5) அகராதி - அமரகோஷ (.........)

13. (1) இராஷ்டிரகூட - முதலாம் நாகபட்ட
(2) வலபி - இரண்டாம் துருவசேன
(3) மௌகாரி - கிரகவர்மன்
(4) புஸ்யபூதி - பிரபாகரவர்த்தன
(5) கௌட - சசங்க (.........)

14. (1) ரூபர் - சட்லஜ்
(2) இந்திரபிரஷ்த - ஜமுனா
(3) ஹரப்பா - ராவி
(4) பாருகச்சா - நர்மதா
(5) வரங்கல் - மகாநதி (.........)

15. (1) சரக - குஷாணர்
(2) பதஞ்சலி - சுங்க
(3) தண்டின் - பல்லவர்
(4) பில்கண - சாதவாகனர்
(5) விசாகதத்த - குப்தர் (.........)

● **16** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் ஆகியவற்றின் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடர் ஒழுங்கில் **தரப்படவில்லை. Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலில் உள்ளவற்றுக்கேற்ப சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் ஒன்று சரியானதாகும். சரியான சேர்மானத்தின் **இலக்கத்தைத் தெரிவுசெய்து அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**16.**

| X | Y |
|---|---|
| (i) பரமேஸ்வரன் | A முதலாம் இராஜராஜன் |
| (ii) மதுரைகொண்டான் | B ஹர்ஷவர்த்தனன் |
| (iii) மும்முடிச் சோழதேவன் | C இரண்டாம் புலிகேசி |
| (iv) வாதாபி கொண்டான் | D முதலாம் பராந்தகன் |
| (v) சகல உத்தராபதநாதன் | E முதலாம் நரசிம்மவர்மன் |

(1) ADCBE (2) CADEB (3) CDAEB (4) DCAEB (5) EDBAC (………)

**17.**

| X | Y |
|---|---|
| (i) கான்வர் | A பிரதிஸ்தான் |
| (ii) சாதவாகனர் | B தஞ்சாவூர் |
| (iii) சோழர் | C மதுரை |
| (iv) பல்லவர் | D பாடலிபுத்ரம் |
| (v) பாண்டியர் | E காஞ்சி |

(1) ABDEC (2) BADCE (3) CADEB (4) DABEC (5) DBAEC (………)

**18.**

| X | Y |
|---|---|
| (i) கோசல தேவி | A பிரசேனாஜித் |
| (ii) மல்லிகா தேவி | B பிம்பிசாரன் |
| (iii) விதிசா தேவி | C கிரகவர்மன் |
| (iv) இராஜஸ்ரீ | D அஜாதசத்ரு |
| (v) வஜிரா | E அசோகன் |

(1) ABECD (2) BAECD (3) BAEDC (4) CABED (5) DAEBC (………)

**19.**

| X | Y |
|---|---|
| (i) ஐகோள் | A கௌதமி பாலஸ்ரீ |
| (ii) பிதரி | B கனிஷ்கர் |
| (iii) கதிகும்பா | C ஸ்கந்தகுப்தன் |
| (iv) சாரநாத் | D காரவேல |
| (v) நாஷிக் | E இரண்டாம் புலிகேசி |

(1) CEDBA (2) DCABE (3) DECAB (4) EDCBA (5) ECDBA (………)

**20.**

| X | Y |
|---|---|
| (i) கடுங்கோன் | A பல்லவர் |
| (ii) விஜயாலயன் | B சாதவாகனர் |
| (iii) சிம்மவிஷ்ணு | C பாண்டியர் |
| (iv) தந்திதுர்க | D சோழர் |
| (v) சிமுக | E இராஷ்டிரகூடர் |

(1) ACDEB (2) CADEB (3) CDAEB (4) DCEBA (5) DECAB (………)

- **21** தொடக்கம் **25** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** உரிய தலைப்பிற்குப் **பொருந்தாதுள்ளது. அப்பொருந்தாததைத்** தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**21. சிந்துவெளி நகரத் திட்டமிடல்**

(1) நகரத் திட்டமிடலும் சுகாதாரப் பராமரிப்பும் சிந்துவெளி நாகரிகத்தின் மிக முக்கியமான அம்சங்களாகும்.
(2) வீதிகளும் ஒழுங்கைகளும் திட்டமொன்றிற்கேற்ப அமைக்கப்பட்டிருந்தன.
(3) மொகஞ்சதாரோவிலும் ஹரப்பாவிலும் கட்டடங்கள் கருங்கற்களினால் கட்டப்பட்டிருந்தன.
(4) வீதிகளினதும் ஒழுங்கைகளினதும் அகலம் 9 தொடக்கம் 34 அடிகளாகக் காணப்பட்டது.
(5) முக்கியமான சிந்துவெளி நகரங்கள் கோட்டை, தாழ்நகரப் பகுதி என இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. (.........)

**22. அசோகன் கல்வெட்டுக்கள்**

(1) அசோகன் கல்வெட்டுக்கள் கிரேக்க, அரமிக், பிராகிருத மொழிகளில் எழுதப்பட்டிருந்தன.
(2) அசோகனின் சில கல்வெட்டுக்கள் பாரசீகத்திலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
(3) அரமிக், கிரேக்க, கரோஷ்டி, பிராமி ஆகிய எழுத்து வடிவங்களில் இவை எழுதப்பட்டுள்ளன.
(4) கரோஷ்டி எழுத்துக்கள் வலது புறத்திலிருந்து இடது புறமாகவும், பிராமி எழுத்துக்கள் இடது புறத்திலிருந்து வலது புறமாகவும் எழுதப்பட்டுள்ளன.
(5) கந்தகாருக்கு அண்மையில் காணப்பட்ட கல்வெட்டு கிரேக்க, அரமிக் ஆகிய இருமொழிகளிலும் எழுதப்பட்டுள்ளது. (.........)

**23. காந்தாரக்கலை**

(1) புத்தரின் சிலைகள் மனித வடிவத்தில் கல்லில் செதுக்கப்பட்டுள்ளன.
(2) காந்தாரக்கலைக்கு முன்னர் பாதச்சுவடு, போதிமரம், குடை, தர்மசக்கரம் போன்ற குறியீடுகளால் புத்தர் அடையாளப்படுத்தப்பட்டார்.
(3) அனேகமான காந்தாரக்கலை வடிவங்கள் புருஷபுரத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலுமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளன.
(4) காந்தாரக்கலையானது பெருமளவில் மதுரா, அமராவதி கலை மரபுகளின் செல்வாக்கிற்கு உட்பட்டதாக நம்பப்படுகின்றது.
(5) இந்தக் கலைமரபானது "கிரேக்க-பௌத்த கலை" அல்லது "இந்தோ-ஹெலனிக் கலை" என்றும் அழைக்கப்படுகின்றது. (.........)

**24. குப்தப் பேரரசின் வீழ்ச்சி**

(1) குப்தப் பேரரசின் வீழ்ச்சி கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியுடன் ஆரம்பமாகின்றது.
(2) குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்கு வழிவகுத்த முக்கிய காரணி ஹூணர்களின் படையெடுப்பாகும்.
(3) உள்நாட்டுப் பிரச்சினைகள் பிராந்திய ஆட்சியாளர்கள் சுதந்திரம் பெறுவதற்கு வழிவகுத்தன.
(4) பாடலிபுத்திரம் குப்தர்களின் வீழ்ச்சியோடு தலைநகரம் என்ற முக்கியத்துவத்தை இழந்தது.
(5) குப்தப் பேரரசின் வீழ்ச்சியிலிருந்து முஸ்லிம்களின் வருகை வரையான காலப்பகுதியில் எந்த ஒரு மன்னனாலும் வட இந்தியாவை ஒன்றிணைக்க முடியவில்லை. (.........)

**25. தென் இந்தியா**

(1) தென் இந்தியாவைக் கைப்பற்றி தன் இராச்சியத்துடன் இணைத்துக் கொண்ட ஒரேயொரு வட இந்திய ஆட்சியாளன் ஹர்ஷவர்த்தனனே ஆவான்.
(2) விந்திய மலைக்குத் தெற்காக இருந்த நிலப்பகுதி தென் இந்தியா எனக் கருதப்படுகிறது.
(3) கிருஷ்ணா - துங்கபத்திரா நதிகளுக்கு வடக்காக உள்ள பகுதி தக்கணம் (டெக்கான்) எனக் குறிப்பிடப்படுகிறது.
(4) கி.பி. எட்டாம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து தக்கணத்தின் பெரும்பகுதி முதலில் இராஷ்டிரகூடர்களினாலும் பின்னர் சாளுக்கியர்களினாலும் ஆளப்பட்டது.
(5) பல்லவர், பாண்டியர், சோழர் ஆகியோர் இராஷ்டிரகூடர், சாளுக்கியரின் சமகால ஆட்சியாளர்களாவர். (.........)

- **26** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A)**, **(B)**, **(C)**, **(D)** என்னும் நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடையாகும். சரியான விடை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,

  **(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரியாயின் ........................................ **1** எனவும்
  **(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் ........................................ **2** எனவும்
  **(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் ........................................ **3** எனவும்
  **(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரியாயின் ........................................ **4** எனவும்
  வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின் .......... **5** எனவும்
  **அடைப்புக்குறியினுள்** எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரி | **(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரி | **வேறு விடைகளின்** எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரி |

**26.** **மகாபாரதம்**

(A) மகாபாரதத்தின் ஆசிரியராக வியாசர் கருதப்படுகின்றார்.
(B) இந்தக் காவியம் கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இடையிலான முரண்பாடுகளைப் பேசுகின்றது.
(C) குருஷேத்திர யுத்தத்தில் யுதிஷ்டிரர் பெற்ற வெற்றியோடு இப்போர் முடிவடைகின்றது.
(D) பாண்டவர்கள் கி.பி. ஆறாம் நூற்றாண்டிலும் வலிமை கொண்ட இனக் குழுமமாக விளங்கினர்.

(.........)

**27.** **இருக்கு வேத மக்கள்**

(A) காபூலிலிருந்து கங்கைச் சமவெளி வரையிலான பரந்த பிரதேசத்தை இருக்கு வேத மக்கள் அறிந்திருந்தனர்.
(B) விந்திய மலைக்குத் தெற்கே உள்ள பிரதேசத்தையும் அவர்கள் அறிந்திருந்தனர்.
(C) கடல் பற்றி அவர்கள் அறியாதிருந்தனர்.
(D) இருக்கு வேத மக்களின் பிரதான உணவாக சோறு இருந்தது.

(.........)

**28.** **பாண்டியர்**

(A) இந்தியத் தீபகற்பத்தின் தென்முனையிலிருந்து கிழக்குக் கரையோரம் வரையான பகுதி பாண்டிய மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்டது.
(B) ஸ்ரீமாறஸ்ரீவல்லபன் எனும் பாண்டிய ஆட்சியாளன், இலங்கை அரசனையும் பல்லவ, கங்க, சோழ ஒன்றிணைந்த படையினையும் தோற்கடித்தான்.
(C) முதலாம் இராஜராஜனால் சோழப் பேரரசுடன் பல்லவ இராச்சியம் இணைக்கப்பட்டதுடன் பாண்டிய இராச்சியம் முடிவடைந்தது.
(D) பாண்டியர் இந்து மதத்தின் ஆதரவாளர்களாக இருந்தபோதும் பௌத்த மதம் அவர்களின் ஆட்சியில் செழித்து வளர்ந்தது.

(.........)

**29.** **பல்லவர்**

(A) சாதவாகனரின் வீழ்ச்சியின் பின்னர் தக்கணத்தில் பல்லவர் அதிகாரத்திற்கு வந்தனர்.
(B) முதலாம் மகேந்திரவர்மனின் ஆட்சிக்காலத்தில் பல்லவருக்கும் சாளுக்கியருக்கும் இடையிலான மோதல்கள் ஆரம்பமாகின.
(C) முதலாம் நரசிம்மவர்மனின் படையினர் சாளுக்கிய மன்னனான இரண்டாம் புலிகேசியைத் தோற்கடித்ததுடன் அவனைக் கொலையும் செய்தனர்.
(D) இரண்டாம் புலிகேசியின் மரணத்தின் பின்னர் சாளுக்கியரின் தலைநகரமான வாதாபி பல்லவ இராச்சியத்தின் ஒரு மாகாண நிர்வாக மையமாக மாறியது.

(.........)

**30.** **ஹர்ஷவர்த்தனன்**

(A) குப்தர்களுக்குப் பின்னர் வடக்கு மற்றும் தெற்கு இந்தியாவை ஒன்றிணைப்பதில் ஹர்ஷவர்த்தனன் வெற்றி கண்டான்.
(B) ஹர்ஷவர்த்தனன் கௌடா அரச குடும்பத்துடன் திருமண உறவுகளை ஏற்படுத்திக்கொண்டான்.
(C) ஹர்ஷவர்த்தனன் முதலில் தானேஸ்வரின் ஆட்சியுரிமையைப் பெற்றதுடன் கானோஜ் சிம்மாசனத்துக்கு சட்டபூர்வ வாரிசு இல்லாத நிலையில் கானோஜின் அரசுரிமையை ஏற்றுக்கொள்ளுமாறு அவன் அழைக்கப்பட்டான்.
(D) ஹர்ஷவர்த்தனன் தனது தலைநகரை தானேஸ்வரிலிருந்து கானோஜிற்கு மாற்றிக்கொண்டான்.

(.........)

- **31** தொடக்கம் **35** வரையிலுள்ள ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**31.** பாடலிபுத்திர நகரத்தின் தாபகர் யார்?
(1) பிம்பிசாரர் (2) உதயன் (3) மகா பத்மநந்தன்
(4) சந்திரகுப்த மௌரியன் (5) புஸ்யமித்ர சுங்கன் (.........)

**32.** எகிப்திய மன்னனான தொலமி பில்டல்போஸினால் மௌரிய அரச சபைக்கு அனுப்பப்பட்ட தூதுவன் யார்?
(1) டெய்மாகோஸ் (2) மெகஸ்தெனிஸ் (3) டியோடரஸ்
(4) டியோனிசியஸ் (5) அன்ரியோகஸ் (.........)

**33.** நாலந்தா பௌத்த மடாலயத்தைத் தாபித்தவராகக் கருதப்படுபவர் யார்?
(1) முதலாம் குமாரகுப்த (2) கோபால (3) தேவபால
(4) தர்மபால (5) விஷ்ணுகுப்த (.........)

**34.** சோமநாத் கோயில் எந்தக் கடவுளுக்காக அர்ப்பணிக்கப்பட்டது?
(1) விஷ்ணு (2) சிவன் (3) சூரியன்
(4) கிருஷ்ணர் (5) அக்னி (.........)

**35.** சோழப் பேரரசு எத்தனை மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது?
(1) ஆறு (2) ஏழு (3) எட்டு
(4) பன்னிரெண்டு (5) பதினான்கு (.........)

- **36** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களில் **இரண்டு** கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருந்துவது எதுவென்பதைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **1** | சரியானது | பிழையானது |
| **2** | சரியானது | சரியானது |
| **3** | பிழையானது | பிழையானது |
| **4** | பிழையானது | சரியானது |
| **5** | சரியானது | சரியானதும் **முதலாம்** கூற்றினை நன்றாக விளக்குவதுமாகும். |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| **36.** | அங்குத்தர நிக்காயத்தில் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் இந்தியாவில் பதினாறு மகாஜனபதங்கள் இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. | அப்பதினாறு மகாஜனபதங்களுள் சாக்கயாஸ், பக்காஸ், பூலி, காலமஸ், கோலியஸ், மோரியஸ், விதேகஸ், லிச்சவி ஆகிய கணராஜ்யங்கள் காணப்பட்டன. | (.........) |
| **37.** | சமண தீர்த்தங்கரரில் இறுதியானவரான மகாவீரர், பிம்பிசார மன்னரின் சம காலத்தவர் ஆவார். | கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் வல்லபையில் சமண தீர்த்தங்கரரின் போதனைகள் எழுதப்பட்டன. | (.........) |
| **38.** | மௌரிய அரச சபையில் மகா அலெக்சாந்தரின் தூதுவராக மெகஸ்தெனிஸ் இருந்தார். | பாடலிபுரத்தின் மாநகர நிர்வாகம் ஆறு ஆணையாளர் சபைகளினால் நடத்தப்பட்டது என்று மெகஸ்தெனிஸ் குறிப்பிடுகின்றார். | (.........) |
| **39.** | அசோகன் தன் கல்வெட்டுக்களில் தன் இராச்சியத்தின் தெற்கு எல்லையில் பாண்டியர்கள் சுதந்திரமான மக்களாக இருந்தனர் என விபரிக்கின்றார். | பாண்டிய இராச்சியத்தின் தூதுக் குழுவொன்றை உரோமப் பேரரசனான ஒகஸ்ரஸ் சீசருக்கு அனுப்பியதாக ஸ்ராபோ குறிப்பிடுகின்றார். | (.........) |
| **40.** | அலகபாத் தூண் சாசனம் காலவரன் முறையில் சமுத்திரகுப்த மன்னனின் யுத்த வெற்றிகள் பற்றிய தகவல்களைத் தருகின்றது. | சமுத்திரகுப்தனால் தக்ஷீணபதத்தின் ஆட்சியாளர்கள் தோற்கடிக்கப்பட்டு, கைப்பற்றப்பட்ட பின்னர் அவர்களைத் தனது அதிகாரத்தின் கீழ் ஆட்சிபுரிவதற்கு அனுமதித்தான். | (.........) |

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

# අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2019

නව නිර්දේශය/ புதிய பாடத்திட்டம்

විෂය අංකය பாட இலக்கம் **25A** විෂයය பாடம் **இந்திய வரலாறு**

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 2 | 21. | 3 | 31. | 2 |
| 02. | 4 | 12. | 3 | 22. | 2 | 32. | 4 |
| 03. | 1 | 13. | 1 | 23. | 4 | 33. | 1 |
| 04. | 4 | 14. | 5 | 24. | 5 | 34. | 2 |
| 05. | 3 | 15. | 4 | 25. | 1 | 35. | 3 |
| 06. | 2 | 16. | 3 | 26. | 5 | 36. | 1 |
| 07. | 5 | 17. | 4 | 27. | 2 | 37. | 2 |
| 08. | 1 | 18. | 2 | 28. | 1 | 38. | 4 |
| 09. | 3 | 19. | 5 | 29. | 3 | 39. | 2 |
| 10. | 5 | 20. | 3 | 30. | 4 | 40. | 4 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 1 × 40 = 40

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

ඉන්දීය ඉතිහාසය II (II කොටස)
இந்திய வரலாறு II (பகுதி II)
History of India II (Part II)

25-A T II

**இந்திய வரலாறு - ஆதிகாலம் முதல் கி.பி. 1206 வரை**

**அறிவுறுத்தல்கள் :**

✳ **முதலாம்** வினா கட்டாயமானது. முதலாம் வினாவுக்கும் **B, C** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக் குறைந்தது ஒரு வினாவையேனும் தெரிவுசெய்து மேலும் **மூன்று** வினாக்களுக்கும் விடை எழுதுக. (**முதலாம்** வினாவுக்கு விடையளிப்பதற்கு **இந்திய புறவுருவப்படம்** வழங்கப்பட்டுள்ளது.)

## பகுதி A

**1.** உமக்கு வழங்கப்பட்டுள்ள புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள அனைத்து இடங்களையும் குறித்துப் பெயரிடுக.

(i) ஹரப்பா (ii) விந்திய மலை
(iii) தக்ஷீலா (iv) சுப்பராக
(v) பரோடா கணவாய் (vi) யமுனா நதி
(vii) காஞ்சி (viii) கலிங்கம்
(ix) ஐகோள் (x) பிரயாக்
(xi) தாம்ரலிப்தி (xii) உஜ்ஜயினி

*(சரியாகக் குறித்துப் பெயரிடப்படும் ஒவ்வொன்றிற்கும் **01** புள்ளி வீதமாகும்.)*

More Past Papers at
tamilguru.lk

## பகுதி B

**2.** சிந்துவெளி மக்களின் சமூக, பொருளாதார, கலாசார நிலைமைகள் பற்றிப் பரிசீலனை செய்க. (16 புள்ளிகள்)

**3.** "பிந்திய வேதகாலம் ஒரு நிலைமாறும் காலப்பகுதியாகும்."

(i) பிந்திய வேதகாலக் குடியிருப்புக்கள் பிரதானமாக எந்த நதிக்கு அண்மையில் அமைந்திருந்தன? (01 புள்ளிகள்)

(ii) பிந்திய வேதகாலம் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளத்தக்க மூலாதாரங்கள் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) பிந்திய வேதகால சமுதாயத்தின் பிரதான பண்புகளை விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) இருக்கு வேதகாலத்தில் நிலவிய அரசியல், சமய நிலைமைகள் பிந்திய வேதகாலத்தில் மாற்றமடைந்த விதத்தைப் பரிசீலனை செய்க. (09 புள்ளிகள்)

**4.** "அசோகனின் தர்ம கொள்கையானது பௌத்த சமயத்தின் முழுமையான செல்வாக்கைக் கொண்டுள்ளது." இக்கூற்றினை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. (16 புள்ளிகள்)

**5.** பின்வரும் தலைப்புகளுள் எவையேனும் **இரண்டினது** வரலாற்று முக்கியத்துவத்தைப் பரிசீலனை செய்க.

(i) வடமேற்கு எல்லைக் கணவாய்கள்

(ii) கி.மு. ஆறாம் நூற்றாண்டில் காணப்பட்ட குடியரசுகள்

(iii) நந்த வம்சம்

(iv) அர்த்தசாஸ்திரம் (08 × 2 = 16 புள்ளிகள்)

## பகுதி C

**6.** மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்கும் குப்தப் பேரரசின் எழுச்சிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வடமேற்கு இந்தியாவில் அரசியல், கலாசாரத் துறைகளில் பல்வேறு வெளிநாட்டுப் படையெடுப்பாளர்களின் பங்களிப்பைப் பரிசீலனை செய்க. (16 புள்ளிகள்)

**7.** "இரண்டாம் சந்திரகுப்தன் ஆட்சிக் காலத்திலே குப்தப் பேரரசின் ஆதிக்கம் அதன் உச்ச நிலையை அடைந்தது."

(i) இரண்டாம் சந்திரகுப்தன் ஆட்சிக் காலத்திலே இந்தியாவிற்கு வருகை தந்த புகழ் பெற்ற யாத்திரிகரான சீனத்துறவியின் பெயரைக் குறிப்பிடுக. (01 புள்ளிகள்)

(ii) இரண்டாம் சந்திரகுப்தன் பயன்படுத்திய **இரண்டு** விருதுப் பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) இரண்டாம் சந்திரகுப்தன் தனது அரசியல் அதிகாரத்தை விரிவுபடுத்துவதற்காக மேற்கொண்ட திருமண உறவுகள் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iv) குப்தப் பேரரசின் விரிவாக்கத்திற்காக இரண்டாம் சந்திரகுப்தன் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிப் பரிசீலனை செய்க. (10 புள்ளிகள்)

**8.** பின்வரும் தலைப்புக்களில் பால வம்சத்தின் முக்கியத்துவத்தை விளக்குக.

(i) வங்காளத்தில் ஓர் இராச்சியத்தை ஏற்படுத்தியமையும் அதன் விரிவாக்கமும்

(ii) பால வம்சத்தினரின் ஆட்சியில் ஏற்பட்ட சமய, கலாசார அபிவிருத்திகள் (16 புள்ளிகள்)

**9.** பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் **இரண்டினது** வரலாற்று முக்கியத்துவம் தொடர்பாகச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) அலகபாத் மெய்க்கீர்த்தி

(ii) இரண்டாம் புலிகேசியின் ஆட்சியில் சாளுக்கிய அதிகார விரிவாக்கம்

(iii) முதலாம் இராஜேந்திரனின் ஆட்சியில் இடம்பெற்ற சோழர்களின் அதிகாரப் பரவல்

(iv) அராபிய, துருக்கியப் படையெடுப்புக்கள் (08 × 2 = 16 புள்ளிகள்)

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

| | | |
|---|---|---|
| ඉන්දීය ඉතිහාසය II<br>இந்திய வரலாறு II<br>History of India II | 25A | T |

| | | | |
|---|---|---|---|
| ප්‍රශ්න අංකය<br>வினா இல.<br>Question No. | 1 | විභාග අංකය<br>சுட்டெண்<br>Index No. | ................................ |

